## ஒபெக் நிதியத்தின் மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2021

ஒபெக் நிதியத்தின் மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் & போக்குவரத்து அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவாக்கல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்டோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஜுன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 செப்தம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஏற்கனவே மீளப்பெறப்பட்ட தொகை ரூபா 31.89 மில்லியன் வெளிநாட்டு உதவியின் கீழ் பதிவுசெய்திராமல் நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டு மீளப்பெறத்தக்கவையாக காட்டப்பட்டிருந்தது. | 31.89 | செயற்திட்டத்தின் ஆரம்பகட்டத்திலிருந்து கடனிலிருந்தான மீளப்பெறல்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. ரூபா 31.28 மில்லியன் மானில கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையில் அது இல்லாதிருந்ததிலிருந்து மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவிகணக்கில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான கடன் மீதியை வெளிப்படுத்த செயற்திட்டத்தின் உண்மையான மீளப்பெறல்களை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய கணக்கு 2021 திசெம்பர் மாதத்திற்காக இடைக்கால கொடுப்பனவு பட்டியல் இல.36 இற்காக செய்யப்பட்ட பிழையான ஏற்பாடுகள் காரணமாக ரூபா 18.57 மில்லியனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 18.57 | கடுவெல – அதுருகிரிய வீதி செயற்திட்டத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட நிர்மான செயலாற்றல் கோவிட் 19க்கு பிந்திய நிலமை மற்றும் உடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் சீமெந்து போன்ற மூலப்பொருட்களின் குறைபாடு போன்றன காரணமாக அடையமுடியாமலிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான பொறுப்பினை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | காணி சுவீகரிப்பு மீது கடுவல – அதுருகிரிய வீதியின் செலுத்தவேண்டிய வட்டிக்கான ஏற்பாடு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு வட்டியின் பிரதி காரணமாக ரூபா 15.99 மில்லியனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | 15.99 | அதனடிப்படையிலான வட்டி செலவினங்களின் தொடர்புபட்ட பிரதிகளை சீராக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | தவறினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | காணி சுவீகரிப்பு மீது கடுவல – அதுருகிரிய வீதியுடன் தொடர்புபட்ட ரூபா 69.97 மில்லியன் தொகையான செலுத்தவேண்டிய வட்டி 2021 திசெம்பரில் உள்ளவாறு இழப்பீட்டு கொடுப்பனவாக தவறுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | 69.97 | அதனடிப்படையிலான வட்டி செலவினங்களின் தொடர்புபட்ட பிரதிகளை சீராக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | தவறினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 119.38 மில்லியன் தொகையான நீண்டகாலகடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 119.38 | கருத்துரைக்கவில்லை. | தவறினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம் 04 தேசிய வீதிகளின் 25.8 கி.மீகளின் புனரமைப்பு வேலைகள் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 02 ஒப்பந்தப்பொதிகளின் கீழ் பின்னர் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கையானது 2015 ஜூன் 26 இல் கையொப்பமிடப்பட்டிருந்தும் 02 ஒப்பந்தப்பொதிகளின் புனரமைப்பு வேலைகள் 2 ½ வருடங்கள் கடந்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தப்பொதி - 1 இன் கீழான கடுவல தொடக்கம் அத்துருகிரிய வீதியின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீகு செயலாற்றல் 96.52 சதவீதத்திற்கு எதிராக 82.79 சதவீதத்தினை மாத்திரமே அடைந்திருந்தார். பின்னர் ஒப்பந்தப்பொதி – 1 இன் கீழான வல்கம - அத்துறுகிரிய வீதியின் 1.25 கி.மீகளின் புனரமைப்பு வேலைகள் நிதிகளின் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தப்பொதி – II இன் கீழான 2 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மேல்மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 17 மில்லியனிற்காக 2015 ஜூன் 26 இல் கைச்சாத்திடப்பட்டு 2019 ஜூன் 30 இல் காலாவதியாகியிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்தின் நிர்மான நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக கடன் முடிவுத்திகதி 2022 செப்டம்பர் 30 வரை கடன் வழங்கும் முகவரினால் பல்வேறு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தன. கடன் மீளச்செலுத்தல் 2020 இல் ஆரம்பித்திருந்தும் செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தகடன் வசதிகளில் 31 சதவீத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 5.19 மில்லியன் தொகையினை மீளப்பெற முடியாமல் இருந்தது. | உடன்பட்டனர். 2 ஒப்பந்தங்களும் காணி சுவீகரிப்பில் தாமதம் மற்றும் பொதுப்பயன்பாடுகளை நகர்த்துவதில் தாமதம் பிரதானமாக சீஈபி மின்சார கம்பங்களை நகர்த்தும் வேலை போன்றன காரணமாக திட்டமிடப்பட்ட படி செயற்பட முடியாதுள்ளது. மேற்கூறிய நிலமை கடனின் குறைந்தமீளப்பெறலினால் ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்படவேண்டிய துடன் கடன் காலாவதியாவதற்கு முன்னர் அவைகளை பூர்த்திசெய்ய துரிதப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 450 மில்லியன் மற்றும் ரூபா 85 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் முறையே வெளிநாட்டுக்கடன் மற்றும் ஜீஓஎஸ்எல் செலவினங்கள் என்பனவற்றின் பயன்படுத்தலிற்காக 2021 இல் பொதுத்திறைசேறியினால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் 16 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 70.5 மில்லியன் தொகையான வெளிநாட்டு கடன் ஒதுக்கீடு மற்றும் 05 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 4.1 மில்லியன் தொகையான ஜீஓஎஸ்எல் ஒதுக்கீடுகள் என்பன செயற்திட்டத்தின் வேலைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | உடன்பட்டனர். | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் நிதிபயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்க முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்தபொதி – 2 இன் மொத்த நிர்மானக்கிரயம் ரூபா 1,064 மில்லியனில் 27 சதவீத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 291 மில்லியன் உண்மையான வேலைப்பரப்பில் அதனடுத்த மாற்றங்கள் காரணமாக அதிகரித்திருந்தது. இருப்பினும் 2006 அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 8.13.4 இன் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகை குழு என்பனவற்றின் தேவையான அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். பொதி II இன் மொத்த ஒப்பந்த கூட்டுமொத்தம் காணி சுவீகரிப்பு, வடிகான்களை அமைப்பதற்கான அளவுகளில் அதிகரிப்பு மற்றும் சுவர் நிர்மானம் போன்றன காரணமாக அதிகரித்திருந்தது. | 2006 அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 8.13.4 இன் பிரகாரம் தேவையான அனுமதியை எடுத்தல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ப்பட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 458 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 2,611 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,412.48 மில்லியன் தொகையான இழப்பீடு இழப்பீடு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. அதற்குமேலதிகமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடு இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் மீது ரூபா 97.27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் எவ்வித காணித்துண்டுகளும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் உடன்பட்டனர், காணிகள் இழப்பீடுகளின் தாமத கொடுப்பனவுகள் மீதான வட்டி கொடுப்பனவு செலுத்தப்பட்ட பின்னர் காணி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மிக அண்மையில் வட்டிக்கொடுப்பனவுகளிற்கு முன்னர் காணிகளை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |